பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

வெளிநிலைப் பல்கலைக்கழக கல்வி
B.A. 1988 டிசம்பர்
பொருளியல்
S. வரதராஜன்
பிரிவு: I சனி 8-00 a.m. வியாழன் 10.00 a.m
பிரிவு: II சனி 3-00 p.m. வியாழன் 10.00 a.m
BECON
156/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ 2/-

வெளிநிலைப் பல்கலைக்கழக கல்வி
G. A. Q.
1989 ஏப்ரல்
பொருளியல்
S. வரதராஜன்
சனி, ஞாயிறு
1-00—3-00 p. m.
BECON
156/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஞூ ஆனி மீ 28 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ்தா பிறை 27 ( 12 - 07 - 1988 ) UTHAYAN- A lively Tamil Daily கதிர்: 129

## கடல்வலயச் சட்டப் பாதிப்பு:

# நஷ்டஈடு வழங்குவது யார்? இந்தியாவா? இலங்கையா?

## தெளிவில்லாத நிலைமை

— உதயன் வடமராட்சிச் செய்தியாளர்: சி. சுந்தரலிங்கம் —

வடமராட்சி, ஜூலை 12

கடல் வலயச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நஷ்டஈடு, நிவாரணம் என்பனவற்றை யார் வழங்குவது? இந்தியாவா ? இலங்கையா ?

இது குறித்துத் தெளிவற்ற நிலைமை உருவாகி உள்ளது. அதனுல் கடல் வலயத்தால் பாதிக்கப்பட்டுத் தொழில் இழந்து, வருமானம் இழந்திருக்கும் லட்சக் கணக்கான மீனவர்கள் நிர்க்கதிக்கு ஆளாகும் அவலநிலை தோன்ற உள்ளது.

புலோலி அமைதிப் படை முகாமில், அமைதிப் படையின் வடபகுதித் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் எஸ். வி. சர்தேஷ்பாண்டேக்கும், அப்பகுதி மக்கள் பிரமுகர்களுக்கும் இடையில் நடந்த சந்திப்பின் போது, மேற்கண்ட சந்தேக நிலை பற்றிய தகவல் வெளியானது.

கடல்வலயச் சட்டத்தினுல் மீனவர்கள் தமது ஜீவனுேபாயத்துக்கு வழியின்றி பெரிதும் கஷ்டப்படுகிருர்கள் என்றும் —

கடல் வலயச் சட்டத்தை நீக்குமாறும் — மக்கள் பிரமுகர்கள் மேஜர் ஜெனரலிடம் கேட்டுக்கொண்டனர்.

இப்போது கடல் வலயச் சட்டத்தை நீக்க முடியாது என்றும், அது குறித்துத் தாம் மனம் வருந்துவதாகவும் தெரிவித்த மேஜர் ஜெனரல் சர்தேஷ்பாண்டே —

பாதிக்கப்பட்ட மீனவருக்குப் போதிய நிவாரணம், நஷ்டஈடு, வழங்குமாறு மத்திய அரசு மூலம் இலங்கை அரசுக்குச் சிபார்சு செய்விப்பதாகவும் கூறினுர்.

அந்தக் கட்டத்தில், பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் —

கடல் வலயச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட மீனவருக்கு இந்திய அரசே நஷ்டஈடு நிவாரணம் வழங்கவேண்டும் என்ற நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கம் எடுத்திருப்பதாகத் தெரிவித்தார். மீனவர்கள்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மன்னுரில் பேரணி நடத்திய மாணவர், ஆசிரியர் கைது!

### வெள்ளைப்புரு, பூமாலையும் பறிப்பு!

வவுனியா, ஜூலை 12

கடந்த வியாழனன்று மன்னுர் மாவட்ட மாணவர்கள் நடத்திய சமாதானப் பேரணி இந்திய அமைதிப்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு திருப்பியனுப்பப்பட்டதுடன், ஆறு உயர்தர வகுப்பு மாணவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

தொடர்ந்து இடம்பெற்ற தேடுதலில் 5 மாணவர்களும் ஒரு பாடசாலை அதிபர், உப அதிபர் ஒருவர் ஆசிரியர் ஆகியோரும் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

★ பாடசாலைகளிலும் பாடசாலைகளுக்கு அருகிலும் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டும் —

★ கைது செய்யப்பட்ட மாணவர்களை

[6 ஆம் பக்கம் பார்க்க]



பேராசிரியர் நந்தியின் மணி விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. விழாவில் பேராசிரியர் ''நந்தி'' உரையாற்றுவதையும்—விழாவுக்கு வந்திருந்தோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்

(படங்கள்:- ஜெயம்) [ செய்தி 5ஆம் பக்கத்தில் ] (க)

### இரு படைகளும் சோதனை, தேடுதல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மீண்டும் இந்திய, ஸ்ரீலங்கா படையினர்களின் சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன,

ஸ்ரீலங்கா படையினர் வீதியில் நடமாடும் மக்களை மட்டும் சோதனைக்குட்படுத்துகிருர்கள்.

இந்தியப் படையினர் சகல கிராமங்களுக்கும் சென்று முன்னர் தேடுதல நடத்தியதுபோல் கடந்த வாரம் முதல் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிருர்கள்.

சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (க-10)

### வடமராட்சி ஊரடங்கில் மாற்றம்

வடமராட்சி, ஜூலை 12

வடமராட்சிப் பகுதியின் ஊரடங்கு நேரத்தில் நேற்று முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதுவரை இரவு 7 மணிமுதல் ஊரடங்கு அமுலுக்கு கொண்டு வரப்பட்டது.

நேற்று முதல் இரவு 9 மணியிலிருந்தே வடமராட்சியிலும் ஊரடங்கு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டு காலை 5 மணிக்குத் தளர்த்தப்படும்.

(க-160)

### வவுனியா விமான நிலைய விஸ்தரிப்பால்

## இடம்பெயர்ந்தோருக்கு புதிய மாதிரிக் கிராமம்!

யாழ்ப்பாணம், ஜூலை. 12

1984 ஆம் ஆண்டு வவுனியா விமான நிலைய விஸ்தரிப்பால் இடம்பெயர்ந்த குடும்பங்களை குடியமர்த்துவதற்காக மன்னுர் வீதியில் செக்கடிப் புலவு என்ற இடத்தில் மாதிரிக் கிராமம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா அரசும், ''போரூட்'' ஸ்தாபனமும் இணைந்து மேற்கொண்டு வருகின்றன.

இந்தப் பகுதியில் இருந்த 82 குடும்பங்கள் இந்த விமான நிலைய விஸ்தரிப்பால் இடம்பெயர்ந்திருந்தன. மேற்படி குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா அரை ஏக்கர் காணி வீதம் வழங்கப்படவுள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### இனங்காணுத சடலம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

சுமார் முப்பது வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவரின் சடலம் இனங்காணப்படாமல் யாழ். பெரியாஸ்பத்திரி பிரேத சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப இளைஞர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடக்கக் காணப்பட்டு உரும்பராய் கிழக்குக் கிராமசேவகரால் சடலம் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. (அ)

## முல்லைத்தீவு, வவுனியா, மன்னுர் நீதிமன்ற நிர்வாகம் யாழ்ப்பாணத்துக்கு

வவுனியா ஜூலை 12

வடமத்திய மாகாண சபை இயங்கத் தொடங்கியுள்ளதைத் தொடர்ந்து, அனுராதபுரம் மாவட்ட மேல்நீதிமன்ற நிர்வாகத்தின்கீழ் இயங்கிவந்த வவுனியா, மன்னுர், முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த நீதிமன்றங்கள் யாவும் ஜூலைமாதம் முதலாம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நிர்வாகத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளன.

இதற்கான மேலிடத்து உத்தரவு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி வவுனியா மேல்நீதிமன்றம் இணைப்பு நீதிமன்றமாகவும் (Combine Court) மாவட்ட நீதிமன்றம், நீதிவான்நீதிமன்றம்என்பனவும் தொடர்ந்து யாழ். நிர்வாகத்தின்கீழ் இயங்கும்.

மன்னுர், முல்லைத்தீவு மாவட்டங்களின் மாவட்ட நீதிமன்றங்கள், நீதிவான் நீதிமன்றங்கள் என்பனவும் இவ்வாறே இயங்கும்.

புதிய அமைப்பின் கீழ் கொடுப்பனவுகள் தொடக்கம் சகல நிர்வாக நடைமுறைகளும் யாழ்ப்பாணத்துடனேயே தொடர்புடையதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### இளைஞர் சேவை மன்றமும்

இதேவேளையில் வவுனியா, மன்னுர், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச்சேர்ந்த இளைஞர் சேவை மன்றக் கிளை அலுவலகங்களும் அனுராதபுரத்திலிருந்து பிரித்தெடுத்து யாழ்ப்பாணத்தின் உதவிப் பணிப்பாளர் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது (க-சி-164)

### முச்சந்தி முரளி



யு. என். பியின் தலைவர் ரஞ்சனும், வீதிச் சண்டை வரும் என்டு கொஞ்சநாளைக்கு முன்னர் சொன்னுர். இப்ப அனுரா சொல்லுருர். அப்ப இரண்டு தரப்பாரும் களரியில் குதிக்க ரெடி ஆகினம் என்டு சொல்லுங்கோ ... ...!

## சு. க. மீது தடை விதித்தால் சிவில் யுத்தம் நிச்சயம்!

### அனுரா எச்சரிக்கிருர்

கொழும்பு, ஜூலை 12

சுதந்திரக்கட்சி மீது அரசு தடைவிதித்தால் நாட்டில் சிவில் யுத்தம் ஏற்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

வெலிமடையில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் திரு. பண்டாரநாயக்கா பேசினுர். அப்போதே அவர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

சுதந்திரக்கட்சியைத் தடை செய்யத் திரு. ஜெயவர்த்தனு தீர்மானித்தால் சுமார் 50 லட்சம் மக்கள் வீதிக்கு வருவார்கள். கையில் அகப்படும் ஆயுதங்களுடன் அவர்கள் வீதிக்கு வந்து இந்தப் போலி அரசுக்கு ஒரு முடிவு கட்டுவார்கள்.

வன்செயலைக் கைவிட்டு ஜனநாயக வழிக்கு வாருங்கள்என்று ஜே. வி. பியை நான் கேட்பதில் என்ன தவறு உண்டு?

திரு. பிரபாகரனுக்கு முதலமைச்சர் பதவியை வழங்கப்போவதாகத் திரு. ஜெயவர்த்தனு கூறலாம் என்ருல் ஜே. வி. பியினருக்கு மூன்று அமைச்சுக்களை வழங்குவதாக நாம் கூறுவதில் என்ன தவறு உண்டு?

சுதந்திரக் கட்சியினரை தீவிரவாதிகளாக மாற்

(6 ஆம் பக்கம் பார்க்க]

### கொட்டும் மழையில்

## தம்பலகாமத்தில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

சுழற்சி முறையிலான உண்ணுவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வரும் தம்பலகாமம் மக்கள் பிரமாண்டமான ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை சென்ற வெள்ளிக்கிழமை நடத்தினர்.

மழையையும் பொருட்படுத்தாது பெரும் எண்ணிக்கையான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

மழையில் நனைந்தவாறு அநேகர் காவடியும் எடுத்துச் சென்றனர்.

அங்கப் பிரதட்சணை, அடி அழித்தல் ஆகியவையும் இடம் பெற்றன.

ஊர்வலமாகச் சென்று அமைதிப்படை அதிகாரியிடம் மகஜர் ஒன்றை அவர்கள் கையளித்தனர்.

யுத்தநிறுத்தம், பேச்சுவார்த்தை, சமாதானம் ஆகியவற்றை வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் இடம் பெற்றது.

தொடர்ந்து சுழற்சி முறையிலான உண்ணுவிரதப் போராட்டம் இடம்பெற்று வருகிறது.

(இ-150)

### சுபநேரம்

12 - 7 - 1988
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10-29 முதல் 11-59 வரை
ராகுகாலம்:
2-59 முதல் 4-29 வரை

## பாதிக்கப்பட்டோரிடமிருந்து மீண்டும் புதிதாக விண்ணப்பம் கோரப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 12

கடந்த அக்டோபர் 10 ஆம் திகதியின் பின்னர் நடைபெற்ற அசம்பாவிதங்களில் பாதிக்கப்பட்டவர்களின் புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளுக்கென புதிய திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

இதன்படி பாதிக்கப்பட்டோரிடம் இருந்து மீண்டும் புதிதாக விண்ணப்பங்கள் கோரப்படும்.

மேற்படி புதிய திட்டத்தை மறுசீரமைக்கப்பட்ட புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சு தயாரித்து வருகிறது.

இந்தத்தகவலை நிதி திட்டமிடல் அமைச்சின் அதிகாரியும் புனர்வாழ்வு அமைச்சின் பகுதிநேர ஊழியருமான திரு. செல்லபத்மநாதன் உதயனுக்குத் தெரிவித்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஹர்த்தால் அனுஷ்டிக்க புளொட் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 12

நாளை புதன்கிழமையும் மறுநாள் வியாழக்கிழமையும் வடக்கு— கிழக்கில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்க தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) ஏற்பாடு செய்து வருகிறது.

இது தொடர்பாக புளொட் இயக்கத்தின் யாழ் - பிராந்திய பொறுப்பாளர் திரு. எஸ். மனேகரன் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

5½ அடி உயரம் 2½ அடி அகலமான நல்ல பாவிப்பில் உள்ள இரட்டைக்கதவு வெளிநாட்டு குளிர்சாதனப் பெட்டி உடன் விற்பனைக்கு உண்டு. யவ்னு எலக்ரோ பிளேற்றேர்ஸ், நம். 7, கஸ்தூரியார் வேலன், யாழ்ப்பாணம். வண்ணார் பண்ணை சிவன் கோவிலுக்குக் கிட்டிய தூரம். (5024)

## விடுகாணி விற்பனைக்கு

வேலணைகிழக்கு முத்துமாரியம்மன் கோவில் ரோட்டில் 10 பரப்புக் காணியும் எட்டு அறை கொண்ட வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சோமநாதன் 369/2 நாவலர் ரோட் யாழ்ப்பாணம் அல்லது M. நவரெத்தினம் 14A, விதானைவீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். (4996)

## தேவை

இரும்புத் தொழில் பழகுவதில் ஆர்வமுள்ள ஆண்கள் தேவை: மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்கவும்: ரவி – என்ஜினியரிங் வேக்ஸ் 54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி/5738)

## மணமகன் தேவை

யாழ் இந்து வேளாள குலத்து 25 வயதுடைய G. C. E உயர் தரம் வரையிலும் வேறுதுறையிலும் படித்த அழகிய நற்குணமுடைய பெண்ணுக்கு மணமகன் தேவை. ஜாதகத்தில் 8 ல் செவ்வாய், நட்சத்திரம் உத்தரம். மணமகன் கணக்காளர், பொறியியலாளர், பட்டதாரி, வங்கியில் நல்ல பதவிவகிப்பவர், வெளிநாட்டில் வேலைசெய்பவரும் விரும்பத்தக்கது. தகுந்த சீதனம் வழங்கப்படும். தொடர்பு: 172 C/o உதயன் 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (5031)

## மணமகள் தேவை

கொழும்பை இருப்பிடமாக் கொண்ட விஸ்வகர்ம குலத்தைச் சேர்ந்த ஓமானில் டெக்னீசியனாக வேலை பார்க்கும் 29 வயது நிரம்பிய மகனுக்கு மணமகள் தேவை. உடனே சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். முருகையா சிறீதரன், 123/5 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [5037]

## TYPE WRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக்கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road, Jaffna, Samy & Co Shabra அருகாமையில் (C5300)

## உயர்தர மாணவர் மீட்டல் பௌதிகம்

வெளிவந்து விட்டது! விற்பனையாகின்றது சகல புத்தகசாலைகளிலும். மீட்டல் செய்வதற்கு ஒரு சிறந்த கைநூல்– A/L இறுதிச் சோதனைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம். ஒளியியலும், ஒலியியலும், வெப்பவியல், மின்னியல், சடப்பொருளின் இயல்புகள் ஆகியவற்றை எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (4988)

## A/L 90 தூய. பிரயோக கணித வகுப்புக்கள்

A/L 90 தூய, பிரயோக கணித பிரத்தியேக வகுப்புகள் ஆரம்பம். ஆசிரியர் த. காங்கேசபிள்ளை 16/9, சீனியர் ஒழுங்கை, கலட்டி, யாழ்ப்பாணம். A/L 90 தூய, பிரயோக கணிதம் 14–7–88 வியாழன் மாலை 4 மணிக்கு ஆரம்பம். விபரங்கள் நேரில். முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளலாம். [4901]

## தவறிவிட்டது

விஸ்வலிங்கம் விக்னேஸ்வரன் ஆகியஎனது அடையாள அட்டையும் (166969) லைசென்ஸ்சும் சாளிபாஸ்சும் சாவகச்சேரிக்கும் நாவற்குழிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். தகுந்த சன்மானமும் வழங்கப்படும். (5032)

## காணவில்லை

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட குருசாமி சுதாரஞ்சன் என்பவரை 28. 6. 88 ல் இருந்து காணவில்லை. உயரம் 3' 6'' நிறம் கருமை. வயது 9. கண்டவர்கள் கீழ்க்கண்ட விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். 51, புது வீதி, கொய்யாத்தோட்டம். தகுந்த சன்மானம் கொடுக்கப்படும். (5039)

## கிரனேட் வீச்சின் பின் சூடுபட்ட இளைஞன் மரணமானார்

மட்டக்களப்பு, ஜூலை12 காத்தான்குடி கிரனேட் வீச்சுச் சம்பவத்தில் இந்தியப் படையின் துப்பாக்கிச் சூட்டினால் காயமுற்ற இளைஞன் சில நாட்களால் மரணமானார்.

நொச்சிமுனை வாசியான து. பிரகாஷ் (19 வயது) என்ற இந்த இளைஞன் இந்தியப் படை முகாமில் சிகிச்சை பெற்று வந்தார். சடலம் விசாரணை இன்றி உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (இ–21)

## NIRU TUITION CENTRE

KONDAVIL

# A/L 90

யூலை, 15 ல் 3. 00

| | | |
|---|---|---|
| பௌதிகம் | - | திரு. சௌந்தி |
| இரசாயனம் | - | திரு. செல்வா |
| தூய பிரயோகம் | - | திரு. கிருஷ்ணு |
| விலங்கியல் | - | திரு. ஞானம் |
| தாவரவியல் | - | திரு. பாலா |

மாணவர்களின் நலன் கருதி இரசாயனவியலில் கணணிப் (Computer) பயன்பாடு ஆரம்பமாகின்றன. (C5754)

# O/L யூலை
## பரீட்சை எழுதிய மாணவர்க்கான புதிய வகுப்புகள்

1. **A/L Aug. 90**
   கலை / வர்த்தக / விஞ்ஞான / கணித பிரிவுகள்
   ★ யூலை 15 வெள்ளி பி.ப. 3.00 மணிக்கு
2. **O/L Dec. 88**
   4 மாத துரித மீட்டல் வகுப்பு (காலை 8.00 – பி. ப. 1.00)
   ★ யூலை 15 வெள்ளி காலை 8.00 மணிக்கு
3. **SPOKEN ENGLISH CLASS**
   By: Mr. THEVARAJAN
   ★ யூலை 15 வெள்ளி காலை 9.00 மணிக்கு
4. **A/L Aug. 90**
   பகல் முழுநேர வகுப்பு (கலை / வர்த்தக பிரிவு)
   ★ மாணவர் பெயர் பதிவின் பின் ஆரம்பமாகும்.
5. **O/L Dec. 88 பரீட்சைக்கு எமது நிறுவனம் மூலம் விண்ணப்பித்தல்**
   ★ யூலை 13 புதன் காலை 8.00 மணிக்கு.

வெளிமாணவர்களில் ஒரு சிலர் மட்டும் சேர்த்துக் கொள்ளப்படுவதால் முன்கூட்டியே பெயர் பதிவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விரிவுரையாளர் பற்றிய விபரம் நாளைய உதயனில்

(C5755)

## பொது அழைப்பு
### ஒன்று கூடலும் பொதுக் கூட்டமும்

யாழ். பிரென்ஞ்சிய நட்புறவுச் சங்கம் பிரென்ஞ்ச் தேசிய தினத்தைக் கொண்டாடும் முகமாக 14 – 07 – 88 வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு ''ஒன்று கூடலும் பொதுக் கூட்டமும்'' நடைபெறவுள்ளது. பழைய புதிய அங்கத்தவர்கள் யாவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ். பிரென்ஞ்சிய நட்புறவுச் சங்கம்
(Alliance Francaise De Jaffna)
130, 1ஆம் குறுக்கு வீதி
யாழ்ப்பாணம்.

(5036)

# NIRU TUTION CENTRE,
## Kondavil.

## A/L 90 யூலை 16ல் 3.00 p.M

# கலை, வர்த்தகம்

### திருவாளர்கள்

| | |
|---|---|
| ✶ சின்னத்தம்பி | ✶ மரியதாஸ் |
| ✶ தேவா | ✶ வேலா |
| ✶ அருள்நங்கை | ✶ S.S மனோகரன் |
| ✶ குழந்தை | ✶ மஃறூப் |

கலை வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் ஒருங்கிணைந்து போதிக்கப்படும் ஒரே ஒரு நிறுவனம்.

A. A. T. (Sri Lanka) Stage 1

வாரஇறுதி வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

(சி 5753)

# பிளாஸ்ரிக் கவறிங் (LAMENATING) சேவை

அடையாள அட்டைகள், புகைப் படங்கள், ஆவணங்களை பிளாஸ்ற்றிக் கவரிங் (Laminating)

காகிதம், தோல், பிளாஸ்ரிக், பென்சில், பேனைக்களில் வர்ண உஷ்ண அச்சிடல் (Hot Printing)

தரமாகவும், மிகக்குறைந்த கட்டணத்திலும் செய்துகொள்ள

# ஹாசன் பலரக சேவை

21, 6–ஆம் குறுக்குத் தெரு, குருநகர், யாழ்ப்பாணம்.

(C 5702)

## சினிமா ஒப்பரேட்டர் தேவை

யாழ் நகரில் உள்ள பிரபல்யமான படமாளிகை ஒன்றுக்கு சினிமா இயந்திரம் பழுது பார்க்கக் கூடிய சிறந்த அனுபவம் உள்ள ஒப்பறேட்டர் உடனடியாகத் தேவை. 20– 07– 1988க்கு முன்பதாக தகுந்த சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

இல. 276, C/o உதயன்,
யாழ்ப்பாணம். (5237)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வன் தப்பிரானா சித்திரவடிவேல்**
(நீர்வேலி வடக்கு)

மலர்வு 06. 09. 1963 — உதிர்வு 12. 07, 1983

எங்கள் அன்புத் தெய்வமே, வாரிசுக்கோர் மகனே, பாசத்திற்கோர் தம்பியே, அண்ணாவே, ஐந்தாண்டு சென்றாலும் ஆறவில்லை எம் மனம் மாறவில்லை. அன்பின் திருவுருவாய் அறிவின் ஒளிச்சுடராய் எங்கள் குல விளக்காய் வாழ்ந்த உனது நினைவுடன் காலம் எல்லாம் வாழ்ந்திடுவோம்.

உமது பிரிவால் வாடும்
அப்பா, அம்மா
அக்கா, தங்கை.

(5038)

## முதலாவது நினைவு அஞ்சலி



கொடிகாமம் – கச்சாயைச் சேர்ந்த
**அமரர் க. முருகேசு கனகசபை**

மண்ணில்: 9 — 3— 1935 — விண்ணில்: 12— 7— 1987

அன்புடனும் பண்புடனும் ஆதரவளித்து சட்டங்கள் பலகற்று சேவைகள் செய்து இலட்சியங்கள் நனவாக்கப் பாடுபட்டீர் இதயங்கள் அழவைத்துச் சென்றுவிட்டீர் உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து

என்றும் துயருறும் மனைவி,
மகள்; சிவறூபினி
சிவச்செல்வி
உறவினர்கள், நண்பர்கள்.

வதிரி, கரவெட்டி. (5239 )

# மரண அறிவித்தல்

## திருமதி சிவஞானசம்பந்தர் சிவபாக்கியம்

திருமதி. சிவஞானசம்பந்தர் சிவபாக்கியம் அவர்கள் சென்ற 10/ 7/ 88 ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற சிவஞானசம்பந்தரின் அன்பு மனைவியும், திருமதி சி. கருணாட்சி, சதானந்தசிவம், சந்திரசேகரம், சிவப்பிரகாசம், கந்தப்பசேகரம் ஆகியோரின் தாயாரும், திருமதி. த. நகுலேஸ்வரி, திரு. இ. தயாசிவன் ஆகியோரின் பேத்தியும், திரு. முத்துக்குமாரசுவாமி, திரு. சிவசுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 12/ 7/ 88 இன்று செவ்வாய்க்கிழமை கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible],
யாழ்ப்பாணம். (5233)

## ஓராண்டு நினைவஞ்சலி

**சுப்பையா .சத்தியானந்தம்**
(அப்புச்சி)

தோற்றம்: 18. 6. 1963 — மறைவு: 24. 6. 1987

லிபியாவில் விபத்தில் அகால மரணமடைந்த அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

இப்படிக்கு
உன் பிரிவால் வாடும்
அம்மா, அண்ணா,
உற்றார், உறவினர்.

பருத்திக்கலட்டி,
சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம்.

(5234)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 6 – 12 – 1926

மறைவு: 25 - 6 - 1987

**திருமதி கந்தையா சிவக்கொழுந்து**

திதி: 12. 7. 1988

எங்கள் அன்புத் தெய்வமே! ஆண்டொன்று சென்றாலும் ஆறவில்லை எம் மனது; மாறவில்லை உங்கள் நினைவு. என்றும் எங்கள் உள்ளங்களில் உலாவி வருவீர்கள்.

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
மற்றும் உறவினர்கள்.

நவக்கிரி,
புத்தூர் (5035)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி
(05-07—88)



**க. கனகசுந்தரலிங்கம்**
(எட்றிச், வெள்ளை)

தாயின் மடியில்: 06—10—1969 — தாயக மண்ணில்: 22—5—1988

களத்தினிலே வேங்கையென வடிவெடுத்த
கள்ளமில்லா எங்கள் வெள்ளையனே!
சின்னஞ் சிறு வயதில் சிறுத்தைபெனச்சீறிய நீ
நின்னுயிரை நிலத்துக்காய்ப்பலி கொடுத்தாய்
இறுதிவரை ஈழமே நம் தாகமென்று
உறுதிகுலையாது உரமோடு போரிட்டாய்!
புலிகள் ஒருபோதும் புல்லுத்தின்னாதென்று
புரியவைத்திடவோ
புவிவிட்டுப்போய்விட்டாய்?
ஈழ மக்கள் நாம் தவிக்கின்றோம்
தலைதாழ்த்தித் தருகின்றோம் நம் அஞ்சலிகள்
கண்ணீரில் கரையாது எம்சோகம் இதை
காலத்தால் விரட்டிடுவோம் காத்திருப்பாய்!

— உடுவில் நண்பர்கள்.

(சி/ 5724 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதபேதமின்றி செயற்படும் கல்லூரி
## மானிப்பாய் இந்துவுக்கு பாராட்டு

மானிப்பாய், ஜூலை 12

சமயப் பிரச்சினை காரணமாக அமைக்கப்பட்ட கல்லூரியாக இருந்தும் பல சமயத்தவர்களின் முயற்சியால் இக்கல்லூரி வளர்ச்சி கண்டது. இன்று மதபேதமின்றி இக்கல்லூரி செயற்படுகின்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் ஸ்தாபகர் தினவுநாளில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவத் துறை விரிவுரையாளர் டாக்டர் டி. குணராசசிங்கம் இவ்வாறு கூறினார்.

மஸ்கன் சுப்பிரமணியம் ஞாபகார்த்த தொழில்நுட்ப கூடத்தில் நடைபெற்ற இவ் விழாவுக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் திரு. வி. மஹேசவேலு தலைமை வகித்தார்.

இந்துக்கல்லூரி ஸ்தாபகர் அமரர் திரு. வே. சங்கரப்பிள்ளையின் சிலைக்கு டாக்டர் குணராசசிங்கம் மலர்மாலை அணிந்து கௌரவித்தார்.

கல்லூரி அதிபர் திரு. வி. மஹேசவேலு தமது தலைமையுரையில், ஆரம்பத்தில் ஒரு சில துறைகளில் மட்டும் முன்னேற்றம் கண்டிருந்த இக்கல்லூரி இன்று பல்வேறு துறைகளிலும் முன்னேற்றம் கண்டுள்ளது.

முறைசாராக் கல்வி, முறைசார்ந்த கல்வி, விளையாட்டு, சாரணியம் போன்ற துறைகளில் வளர்ச்சி கண்டதோடு, தொழில்நுட்பக் கல்வியின் முறைசாராக் கல்விப்பிரிவு யாழ்ப்பாண மாவட்டத்திலேயே முதலிடம் வகிக்கின்றது என்றார்.

சட்டத்தரணி திரு. எஸ். இராஜேந்திரன் சிறப்புரை வழங்கினார்.

கல்லூரி மாணவர்களின் வாத்தியக் கச்சேரிகள், பண்ணிசைகள், சங்கீதக்கச்சேரி ஆகிய கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (இ-90)

### நிவாரணம்

கோப்பாய், ஜூலை 12

கடந்த வருட அசம்பாவிதங்களின் போது கோப்பாய் வடக்கில் சேதமடைந்த வீடுகளின் விபரங்களும், முற்றாக எரியுண்ட குடிசைகளின் விபரங்களும் கோப்பாய் நலன்புரிச் சங்கத்தினால் சேகரிக்கப்பட்டு அவற்றுக்கு தகுந்த நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. (இ-72)

கல்முனை மாவட்டத் தமிழ் ஆசிரியர்களுக்கு

# தமிழில் காசோலை வழங்குமாறு ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கல்முனை, ஜூலை 12

கல்முனை மாவட்டத்திலுள்ள தமிழர் ஆசிரியர்களுக்கு. கல்வித்திணைக்களத்தால் வழங்கப்படும் காசோலைகள், தமிழ் மொழியிலேயே வழங்கப்படவேண்டும். கல்வி அமைச்சு இதற்கான உத்தரவை வழங்கியும். கல்முனைக் கல்வித் திணைக்களம் இந்த உத்தரவை நடைமுறைப்படுத்தாதது வருந்தத்தக்கதும். கண்டிக்கப்படவேண்டியதுமாகும். ஜூலை மாத வேதனத்திற்கான காசோலைகள் தமிழில் வழங்கப்படவில்லையானால் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நேரடித் தொழிற்சங்க நடவடிக்கையில் இறக்கத் தயங்கமாட்டாது.

சங்கத்தின் பொதுச் செயலாளர். திரு. த. மகாசிவம் இவ்வாறு தெரிவித்தார்.

சங்கத்தின் உப தலைவர் திரு. வி. சிவகுரு தலைமையில் கல்முனை உவெஸ்லி கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இந்த மாவட்ட கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடன்சபைக்காக ஆசிரியர்களிடமிருந்து கழிக்கப்பட்ட பணத்தை திருப்பிக் கொடுப்பதில் கல்முனை அலுவலகம், தமிழர் ஆசிரியர்களுக்கு பாகுபாடு காட்டுவது மிகவும் வேதனைக்குரியது ஆகும்.

"தமிழ் பிரதேசங்களிலேயே தமிழர் ஆசிரியர்களுக்கு பாகுபாடு காட்டப்படுவதை சங்கம் அனுமதியாது. இந்த இனரீதியான பாகுபாட்டை சங்கம் வன்மையாகக் கண்டிப்பதோடு, இக்குறைபாடு அடுத்த ஒருஇருமாதங்களுள் தீர்க்கப்படவில்லையாயின். இவ்விவகாரத்தை கல்வி அமைச்சின் கவனத்திற்குக் கொண்டுவந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு சங்கம் வற்புறுத்தும்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்வி அலுவலகங்களுக்கு போதிய தமிழர்கள் கல்வி அதிகாரிகளாக நியமிக்கப்படாததை சங்கம், அமைச்சின் செயலாளரின் நேரடி கவனத்திற்கு கொண்டுவந்து தீர்த்து வைக்கும். இப்படி அவர் கூறினார்.

தமிழர் ஆசிரியர்கள் கட்டுக்கோப்புடன் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தில் இணைந்து ஒரே அணியில் போராடினால் தமது உரிமைகளை இலகுவாக வென்றெடுக்க முடியும் என நிர்வாகச் செயலாளர் திரு. த. அருணகிரிராசா கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் திரு, வி. த. குமாரசாமி, கல்முனை மாவட்ட செயலாளர், திரு. பொன் தவநாயகம் கல்முனைக் கிளைச் செயலாளர் திரு. எஸ். சிவானந்தநாயகம் ஆகியோரும் உரையாற்றினர். (இ)

# கிராமப்புற வளர்ச்சியில் பாலர் பாடசாலைகள் முழு அளவில் பங்களிப்பு

குருநகர், ஜூலை 12

கிராமங்களின் வளர்ச்சியில் பாலர் பாடசாலைகள் முழுப்பங்களிப்பைச் செய்து வருகின்றன.

சர்வோதய பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசிய யாழ்- சர்வோதய வெளிக்கள இயக்குநர் திரு. இ. சிவசுப்பிரமணியம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கருத்தரங்கு யாழ்- சர்வோதய விரிவுரை மண்டபத்தில் போதனாசிரியை செல்வி ந. மலர்விழி தலைமையில் நடைபெற்றது.

திரு. கி. சிவசுப்பிரமணியம் மேலும் பேசுகையில் "நல்லிணக்கமும் பரஸ்பர ஒத்துழைப்பும் இன்றைய கால கட்டத்தில் நமக்கு இன்றியமையாதவை. இவற்றை இப் பாலர் பாடசாலைகள் மூலம் உருவாக்குவது ஆசிரியைகளின் பெரும் பொறுப்பாகும்" என்றார்.

செல்வி ந. மலர்விழி பேசுகையில் "சிந்தனை செயற்திறன் என்பவற்றின் ஊக்குவிப்புக்கு ஊன்றுகோலாக அமைவது பாலர்கல்வி, அக்கல்வி அபிவிருத்திக்கு அத்துறையில் பயிற்றப்பட்ட ஆசிரியைகள் திறவுகோலாகின்றனர்"

சர்வோதய நிர்வாகப் பகுதி அலுவலர் திரு.ச. நகுலேஸ்வரலிங்கம் பேசுகையில் "ஆசிரியர்கள் தம்மைத் தொண்டுகளுக்கு தாயார்படுத்தவும், சேவையை முழுமனத்துடன் வழங்கவுமே இத்தகைய பயிற்சிக் சர்வோதயம் நடத்தி வருகின்றது" என்று கூறினார்.

சர்வோதய இளைப்பாளர் திரு. க. அருளானந்தன் செயல் முறைத் திட்டங்களை நீண்ட நேரம் உபகரணங்கள் மூலம செய்து காட்டி விளக்கம் கொடுத்தார்.

சர்வோதய பாலர் பாடசாலைப் பொறுப்பாளர்கள் செல்விகள் சுந்தராம்பாள் சிவப்பிரகாசம், சாரதா சுப்பிரமணியம் ஆகியோரும் கருத்துரை வழங்கினர். (இ-51)

### பயிர் அழிவு

அராலி ஜூலை 12

அராலியில் மிகக் கூடுதலான அளவில் பயிர் செய்யப்பட்டுள்ள பம்பாய் வெண்காயப்பயிர், தண்டுகோதிப்புழுவின் தாக்கம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. (இ- 12)

# அக்கரைப்பற்றிலும் ஈரோஸ் போராட்டம்

ஈரோஸ் இயக்கத்தின் எதிர்ப்பு நடவடிக்கைப் போராட்டங்கள் கிழக்கு மாகாணத்திலும் நடைபெற்றுவருகின்றன. கிழக்குமாகாணத்தின் இறுதிப் போராட்டத்தை அக்கரைப் பற்றுப் பகுதியில் நடத்துவதற்கான நடவடிக்கைகளை ஈரோஸ் மேற்கொண்டு வருகிறது.

சுன்னாகத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த எதிர்ப்புப்போராட்டம். நெல்லியடியிலும் பின்பு முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளிலும் நடத்தப்பட்டது.

மட்டக்களப்புமாவட்டத்தில் பொத்துவில், கல்முனை எருவூர்பெரியநீலாவினை ஆகிய இடங்களில் இப்போராட்டம் நடத்தப்பட்ட போதிலும் கிழக்கு மாகாணத்தின் இறுதிப் போராட்டம் அக்கரைப்பற்று பகுதியிலே நடத்தப்படும் என ஈரோஸ் பேச்சாளர் தெரிவித்தார். (இ-10)

# துண்டி மயானம் அபிவிருத்தி செய்யப்படுகிறது

யாழ். துண்டி மயான இந்துசபை, மயானத்தை அபிவிருத்தி செய்துவருகின்றது.

நாற்புறமும் சுற்று மதில் அமைத்து கிணறும் கட்டப்பட்டுள்ளது. சடலங்களை எரிப்பதற்கு 125ரூபாவும் அந்தியேட்டி செய்வதற்கு 40 ரூபாவும் சபையால் அற[illegible] மயான காவலாளிக்கு வீடொன்றை நிர்மாணித்துக் கொடுக்கப்பதற்கு சபை ப ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த வீட்டை இப்பகுதி பொது மக்களின் அன்பளிப்பைக்கொண்டு சபை நிர்மாணிக்கத் திட்டமிட்டுள்ளதாக சபையின் [illegible] திரு. [illegible]இராசா தெரிவித்தார். (இ 10)

நிர்கொழும்பு சிறையில்

# தடுத்து வைக்கப்பட்டுள்ள பெண்களை விடுவிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 12

கடந்த இருவருடங்களாக நீர்கொழும்பு சிறைச்சாலையில் எதுவித விசாரணையும் இன்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பெண்களை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கவும்.

வடக்குக் கிழக்கு பிரசைகள் குழுக்களின் இணைப்புக்குழு இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற்றுக்கு அனுப்பியுள்ள அவசரக் கடிதத்தில் மேற்கண்டவாறு கோரி உள்ளது.

பிரசைகள் குழுக்களின் இணைப்புக் குழுவின் சார்பில் அதன் தலைவர் திரு. எஸ். அருணாசலமும் அதன் செயலாளர் திரு. எஸ். சிவானந்தராஜாவும் கையொப்பம் இட்டுள்ளனர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு கடந்த இரண்டு வருடங்களாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள 7 பெண்கள் தம்மை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கக்கோரி யாழ். ஆயர் வணக்கத்துக்குரிய பிதா தியோகுப்பிள்ளைக்கு கடிதம் ஒன்றை அனுப்பி இருந்தனர்.

இதனைத் தொடர்ந்து பல பொதுஸ்தாபனங்களும் அவர்களை விடுதலை செய்யும்படி இலங்கை அரசுக்கும், இந்தியத்தூதுவருக்கும் வேண்டுகோள் கடிதங்களை அனுப்பி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# கோவிலில் திருடியவர் பொருட்களுடன் பிடிபட்டார்

வடமராட்சி ஜூலை 12

வதிரி, ஒல்லி ஒடை முத்துமாரி அம்மன் கோவிலில் திருடியதாகக் கூறப்படும் ஒருவர் பிடிபட்டார். 8ஆம்திகதி இச்சம்பவம் இடம் பெற்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:- சம்பவதினம் இரவு 2. 00மணி அளவில் ஆலயத்தின் மெயின் சுவி

(4 ஆம் பக்கம் பார்க்க)


உ
சிவமயம்

அன்புடையீர்!

நிகழும் விபவ ஆண்டு ஆனி மாதம் 30 ஆம் நாள் (1988 - 07 - 14) வியாழக்கிழமை முற்பகல் 10 . 48— 12.00 மணிவரை உள்ள சுப வேளையில்.

திருநாவுக்கரசு தம்பதிகளின் கனிட்ட புதல்வன்
**சண்முகதாஸ்**
(உரிமையாளர்.
நாமகிரி அச்சகம் மட்டுவில்)
அவர்களுக்கும்

எனது புத்திரி
**டாக்டர் சந்திராதேவி**
(சர்வோதயம் புங்குடுதீவு)
அவர்களுக்கும்

மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெற இருப்பதால் உறவினர், நண்பர்கள், அத்தருணம் சமுகந்தந்து மணமக்களை வாழ்த்தியேகுமாறு அன்புடன அழைக்கிறோம்.

திருமதி செ. நவரத்தினம்
"மிதிலை"
செட்டி குறிச்சி, பண்டத்தரிப்பு.

தங்கள் நல்வரவை நாடுவோர்
திருமதி நவரத்தினம் குடும்பத்தினர்
(தனிப்பட்ட அழைப்பிதழ் கொடுக்க முடியாமைக்கு மன்னிக்கவும்)
(5034)



# வெளிநாட்டு வேலைவாய்ப்பு

## SAUDI OPERATION & MAINTENANCE COMPANY LIMITED

S. O. M. C.

| | | |
|---|---|---|
| 1. | Hospital Cleaners Male | 456 SR |
| 2. | Hospital Cleaners Females | 456 SR |
| 3. | University Cleaners Males | 456 SR |
| 4. | Masons | 600 SR |
| 5. | Carpenters | 600 SR |
| 6. | Drivers | 700 SR |
| 7. | A. C. Mechanics | 650 SR |
| 8. | Electricions | 650 SR |
| 9. | Plumbers | 650 SR |
| 10. | Mechanics | 650 SR |

**AGE: 21 — 49 வரை**

**15-07-88ற்கு முன்னர் பிரயாணம் செய்யலாம்.**

## KUWAIT Cleaners

1. Male Hospital Cleaners - 30 KD

**AGE: 18 — 49 வரை**

● மு.கு: முற்பணம் யாதும் அறவிடப்படமாட்டாது. தங்கள் விசா பெற்றுத்தந்த பின்பு தங்கள் செலவுத் தொகையை அறவிடப்படும். மேலும் எங்கள் நிறுவனத்தால் பின்வருவோரை மட்டும் SUB AGENT ஆகநியமனம் செய்துள்ளோம். இவர்களைத் தவிர வேறு ஒருவரிடமும் கொடுத்து ஏமாற்றம் அடைய வேண்டாம்.

1. S. KOMALESWARAN, Station Road, Kokuvil
2. T. NAGARAJAH, 40/1, Ramanathan Road, Jaffna
3. T. JEYARATNAM, 1/4, Convent Road, Jaffna
4. K. NAGASIVAKUMARAN, Araly North, Vaddukoddai
5. V. R. SADACHARAM, Maravanpulo, Chavakachcheri.

இப்படிக்கு
S. THAMILVANAN
DIRECTOR

**T.V. TRAVELS & TOURIST**

**BROWN ROAD,
(Kokuvil Railway Station Front)
KOKUVIL.**

(C 5739)



# ஈழத்திலும்
## சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ்

- ✶ பகவான் சத்தியசாயிபாபா நேரடிதரிசனம்
- ✶ தென்னிந்திய புனிதஸ்தல யாத்திரை
- ✶ நம்பிக்கையான (CANADA) பயண ஒழுங்கு

மேலதிக விபரத்திற்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரிகள்:

கிளை
24/11 பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

தலைமையகம்
33, 1வது மாடி,
புதிய ஜெமினி கொம்பிளக்ஸ்
சென்னை - 6
தொ. பேசி: 475382.

✶ குறிப்பு: தென்னிந்திய புனிதஸ்தல யாத்திரை
10 . 8 . 88 ஆரம்பம்

(C 5710)



# விக்னு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

[O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]
பிரிவு 4

O/L
DAY CLASSES [8. 30 – 1. 30]
EVENING CLASSES [2. 45 – 4. 45]
MORNING CLASSES [6. 15 - 7. 45]

ஆண்டு 10, 9, 8, 7, 6 ம் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
[ காலை 6. 15 – 7. 45, மாலை 2. 45 – 4. 45 ]
புதிய வகுப்பு ஆரம்பம்: 13. 7. 1988

மு. குறிப்பு:-
I. எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு ஒருங்கிணைந்து போதிக்கப்படும் ஒரே நிறுவனம்.
II. கடமை, கட்டுப்பாட்டுடன் நடாத்தும் ஒரே நிறுவனம்.
III. மாணவர்கள் தரம் அறிந்து வகுப்புக்கள் பிரித்து நடாத்தப்படும்.
IV. G. C. E. [O/L] பரீட்சைக்கான பயிற்சிப் பரீட்சைகள் இலவசமாக நடாத்தப்பட்டது தெரிந்ததே. இவ்வாறு ஒவ்வொரு வருடமும் பரீட்சைகள் நடாத்தப்படும்.

(C5609)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1ம் ஆண்டு நினைவு அஞ்சலி



தாயின் மடியில்:-
17-6-1963

இறைவன் அடியில்:-
12-7-1987

**சுப்பையா சத்தியானந்தம்**
**(அப்புச்சி)**

திரைகடல் ஓடித் திரவியம் தேட லிபியா சென்ற சுன்னாகம் தந்த மைந்தன் இன்று எம் முன் இல்லை.

லிபியா பெற்றோல் கொம்பனி(M.P.S.C.) ஒன்றில் மூன்றாண்டுகள் கடமை புரிந்தார். அன்று கடமைக்கு சென்று கொண்டிருக்கையில் காற்றோடு காற்றாக வந்த கொடிய காலன் வாகன உருவில் வந்து எம் சத்தியத்தைப் பறித்து விட்டான் - எம் சத்தியம் கண்ணிலே ''நீர்'' எதற்கு! காலமெல்லாம் அழுவதற்கு என்பதை நிரூபித்து விட்டாய்.

உன் உருவம் எம் கண்களுக்கு மறையலாம் ஆனால் நீஎன்றும் எம் இதயங்களில் வாழ்ந்து கொண்டே இருக்கின்றாய். ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி.

பிரார்த்திப்பவர்கள்
அன்பு அம்மா, சகோதரர்,
அண்ணிமார், பெருமக்கள்,
நண்பர்கள்.

(5229)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**ஆதிமயிலிட்டி**
**பூதப்பிள்ளை காசிநாதர்**
(முன்னாள் தலைமை ஆசிரியர்)

அவனியில்: 13 - 09 - 1907 | அமரத்துவம்: 12 - 06 - 1988

12 - 06 - 1988 ஞாயிற்றுக்கிழமையன்று இறைபதம் இணைந்து விட்ட எமது அன்புத் தெய்வம் அமரர் பூதப்பிள்ளை - காசிநாதர் அவர்களின்

அந்தியேட்டிக் கிரியைகள்
12-07-88 செவ்வாயன்று இடம்பெறும்.
சபிண்டீகரணக் கிரியைகள்
13-07-88 புதன்கிழமையன்று இடம் பெறும்.

**நன்றி நவிலல்:**

அமரர் அவர்கள் சொற்பகாலம் வீட்டிலும் மருத்துவ மனையிலும் சுகவீனமுற்று இருந்த சமயத்தில் பலவகை உதவி புரிந்தோர்க்கும் அமரரது சமக்கிரியைகளில் கலந்துகொண்டு தமது அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும் மற்றும் பல்வேறு உதவிகளைப் புரிந்தோர்க்கும் எமது இதய நன்றியைக் தெரிவிக்கின்றோம்.

**குறிப்பு:**

தவிர்க்கமுடியாத காரணங்களினால் அமரரது சமக்கிரியைகள் பற்றி பல உற்றார் உறவினர் நண்பர்களுக்கு அறிவிக்கத் தவறியமைக்கு மனம் வருந்துகின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
ஆதிமயிலிட்டி.

(5224)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. பொன்னம்பலம் பத்மநாதன்**
(பொலீஸ் சார்ஜன் மேஜர் - காங்கேசன்துறை)

மலர்வு: 4—09—1948 | உதிர்வு: 27—6—1984

திதி: 12—7—1988

எங்கள் ஒப்பற்ற குடும்பத் தலைவனாய் அன்பின் உருவாய் பாசத்தின் பிறப்பிடமாய் வாழ்ந்து, எம்மையும் வாழவைத்த அன்புத் தெய்வமே! எம்மை விட்டுப் பிரிந்து நான்கு ஆண்டுகள் சென்றாலும் என்றும் எம்இதயத்தில் வாழ்ந்து கொண்டே இருக்கிறீர்கள்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்புமனைவி, மக்கள், தாய், தந்தை, சகோதரர், மாமன், மாமி, மைத்துனிகள், மைத்துனர்.

''பத்ம இல்லம்''
இறங்கணிய வளவு,
காங்கேசன்துறை.

(5800)

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



**உயர்திரு தம்பையா சிவக்கொழுந்து**
**(முத்து) (செங்குந்த முதலியார்)**
(யாழ்/மா.ந. பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளை முகாமையாளர்)

மலர்வு: 1930-02-19 | உதிர்வு: 1987-06-24

திதி: 12-07-1988

அன்பின் சொரூபமே, குடும்பத்தின் குல விளக்கே, பாசத்தின் பிறப்பிடமே, பண்பின் உறைவிடமே பணிந்து நின்றோரைப் பக்குவமாய்க் காத்தவனே உங்கள் ஆத்மா சாந்தி பெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

நின் பிரிவால் வாடும்,

**வடிவேல்**
**பாலச்சந்திரன்**
'பாமதிபவனம்',
கெனடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமகன்,**
**பேரப்பிள்ளைகள்,**

(5022)

### கோவிலில்...

(3ம் பக்கத் தொடர்ச்சி) டனை அணைத்துவிட்டு பொருள்களைச் சந்தேக நபர் அபகரித்தாராம்.

அவ்வேளை அருகாமையில் காவலில் இருந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் காவலாளி இதனைக் கண்டுவிட்டார். திருடனைப் பொருள்களுடன் பிடித்துவிட்டார்.

(இ-160)


# BECON

156, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

## 90 A/L

**விஞ்ஞானம்**
சனி, ஞாயிறு வகுப்புகள்

| | |
|---|---|
| தூயகணிதம் } பிரயோககணிதம் } | நல்லையா |
| பௌதிகவியல் | – மணியம் |
| இரசாயனம் | – பிரபல ஆசிரியர் |
| விலங்கியல் | – தம்பிராஜா |
| தாவரவியல் | – பிரபல ஆசிரியர் |

ஆரம்பம்
16 - 7 - 1988
சனி 8. 00 a. m

(C 5676)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. செல்லர் இரத்தினம் (ஓவியம்)**

தோற்றம் 14 - 6 - 1948 | மறைவு 12 - 7 - 1987

மக்களின் இதயத்திலே இடம் பெற்ற கலைஞன் என்றுமே மறைந்து விடுவதில்லை. அவனது கலைத்திறமை ஒவ்வொன்றும் மனத்திரையிலும் அழியாத ''ஓவியமா''சப் பதிந்து விடுகிறது.

பிரிவால் துயருறும்
**மனைவி, பிள்ளைகள்**
மல்வம், உடுவில்.

(5218)

### சிறுமியின் சங்கிலி அபேஸ்

திருநெல்வேலி, ஜூலை 12

சைக்கிளில் வந்த ஒருவர் நான்கு வயதுச் சிறுமியின் 1½ பவுண் பெறுமதியுடைய தங்கச் சங்கிலியை அபகரித்தார்.

இச் சம்பவம் திருநெல்வேலி நாவலடி வீதியில் நண்பகல் 1 மணி அளவில் இடம்பெற்றது.

வீட்டின் படலைக்கு வெளியே இச் சிறுமி தனது சகோதரியுடன் நின்று கொண்டிருந்த போதே இச் சம்பவம் இடம் பெற்றது.

(இ-143)

### 3 வருடத்தின் பின் வீதி புனரமைப்பு

இருபாலைச் சந்தியிலிருந்து இராச வீதிக்கு செல்லும்வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது. கடந்த மூன்று வருடங்களின் பின்பு தற்போது இந்த வீதி புனரமைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

(இ-72)

### ஓய்வு பெற்றார்



திரு. அ. ஸ்ரீஸ்கந்தராசா யாழ். சிரேஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி சேவையிலிருந்து ஓய்வு பெற்று யாழ் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக பணியாற்றுகின்றார்.

இவர் கலைமாணி (பொருளியல்) முதுமாணி, கல்விடிப்ளோமா பட்டதாரியும், சைவப் புலவரும் ஆவார். (இ


## புதிய உயர் கல்லூரி

**G.C.E. O/L**
**Day Classes**
**Evening Classes**
ஆரம்பம்- 15 - 7 - 88
காலை 8 மணி – மாலை 4 மணி

**SPOKEN ENGLISH**
With GRAMMAR
**BRITTO**

2 ஆம் பிரிவு ஆரம்பம்
விபரங்களுக்கு,
S. அருள்நங்கை
**புதிய உயர்கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(C 5659)


## 90ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் மாணிக்கம் தர்மலிங்கம்**
யாழ்/பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்

தோற்றம்; 24-01-1960 | மறைவு, 15-04-1988

இளநகை தவழும் உன் முகத்தை
இனியெப்போ நாம் காண்போம்
அன்பிற்கும் பண்பிற்கும் அடித்தளமானவனே
அடியோடு எமை மறந்து எங்கு சென்றாய்.
வளாகத்து வீதிகளில் உன்பாதணிகளோசை
வழமையாய்க் காதுக்குள் இப்போதும் கேட்[குதடா
கடமை உணர்வினிலே கண்ணியமாய் நின்ற[வுன்னை
காலனேன் அழைத்தான் காரணத்தை யார[றிவார்.

சீர்வரிசை வாழ்வினிலே தவழ்ந்தவுன் மனை[யாள்
சிந்தையெலாம் கலங்கியழ
பெற்றவரும் சோதரரும் உன் பெயரைச்[சொல்லியழ - நண்பர் நாம்
கண்ணீரை ஆறுக்கி கலங்குகின்றோம் உனைக்[காணாது.

உன் புன்சிரிப்பும் இன் முகமும்
எம் கண்முன்னே உன்னுருவைக் காட்டுதடா
எமை விட்டு நீ பிரிந்து தொண்ணூறு[நாளென்ன
வருடம் தான் ஆனாலும்
யாழ் வளாகம் உள்ளவரை பாதுகாப்பு[ஊழியர் நாம்
உன் நினைவில் வாழ்ந்திடுவோம்.

(உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.)

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்**
பாதுகாப்புத் திணைக்களம்,
யா/பல்கலைக் கழகம்.

(5181)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**லெப்டினன்ற் சலீம்**
**(சண்முகசுந்தரம் அரவிந்தன்)**

தாயக மடியில்; 18-7-67 | தாயக விடிவில் : 12-7-87

அருமை விந்தா!
நேற்றே நடந்தது போல் நெஞ்சம் கனிகிறது. போற்றும் சுதந்திரத்தின் பொன்சுடர் நீ! போன காலமும் மானமும், ஆவியும் மீளவருவன அல்லவே...! எனினும் நாம் காண விழைகின்ற விடுதலைத் தேசம் கனிய முன் போனது கனக்குது நெஞ்சினில்! காலைச் சூரியன் கதிரில் ஒளிர்கிறாய்! ககனம் எங்கும் நீ கண் சிமிட்டுகிறாய்! சோலைக் குயிலெனச் சுற்றித் திரிகிறாய்! சொர்ண விந்தனே! வீர வேங்கையே! நீ எம்முன் தான் நிற்கிறாய்!

அம்மா, அப்பா, தம்பிகள், தங்கச்சி
உறவினர், நண்பர்கள்.

'அரவிந்தம்'
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

(C 5745)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

குறிப்பிற் குறிப்புணரா வாயின் உறுப்பினுள் என்ன பயத்தவோ கண்.

**பொருள்:**

(முகம் கண் இவற்றின்) குறிப்புக்களால் உள்ளக்குறிப்பை உணராவிட்டால், ஒருவனுடைய உறுப்புக்களுள் கண்கள் என்ன பயன்படும்?


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
22073
யாழ்ப்பாணம்.
12-07-1988 த. பெ. இல. 23


## யாரைப் பாராட்டுவது?

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை பேராசிரியர் நந்தியின் மணிவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மணி விழாவை ஒட்டி வெளியிடப்பட்ட நூலை பேராசிரியர் கா. சிவத்தம்பி வெளியிட்டு வைத்து உரையாற்றினார். அவர் தமது உரையில் முன் வைத்த இரண்டு விடயங்கள் காத்திரமானவையும், கனதியானவையும் ஆகும்.

மணிவிழாக்கள், பாராட்டுவிழாக்கள் என்று எழுத்தாளர்கள், கலைஞர்களுக்குத் தான் நடத்துகிறோம், அவர்கள் மேன் மேலும் கலை, இலக்கியத் துறைகளுக்குச் சேவை செய்ய வேண்டும் என வாழ்த்துகிறோம். அவர்கள் இதுவரை செய்த சேவைகளைப் பாராட்டுகிறோம்.

ஆனால் எங்கள் மத்தியில் இருந்து சேவையாற்றிய, திறமை மிக்க தொழில் விற்பன்னர்களில் (Professionals) எத்தனை பேரைப் பாராட்டி இருக்கிறோம்? எத்தனை பேருக்கு மணிவிழா எடுத்திருக்கிறோம்?

இலக்கிய கர்த்தாக்களையும், கலைஞர்களையும் பாராட்டுவது போல அவர்களுக்கு விழா எடுப்பது போல சமூகத்தின் ஏனைய துறைகளிலும் சேவை புரியும் திறமை மிக்கவர்களையும் பாராட்டவேண்டும்; விழா எடுக்க வேண்டும்.

இது பேராசிரியர் சிவத்தம்பி முன்வைத்த முதலாவது நல்ல கருத்து.

சமூகத்தின் வளர்ச்சிக்கு அல்லது முன்னேற்றத்துக்கு உழைப்பவர்கள், திறமை மிக்கவர்கள், சாதனை புரிந்தவர்கள் அவர்கள் எந்தத் தொழில் புரிபவராக இருந்தாலும் பாராட்டப்பட வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் தான் மேலும் பல திறமைசாலிகளையும், சேவையாளர்களையும் உருவாக்க முடியும்.

டாக்டர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், நிர்வாகிகள், பொருளியலாளர்கள் ஆகிய பல துறைகளைச் சேர்ந்தவர்களும் நாட்டுக்கு, பிரதேசத்துக்கு, மக்களுக்கு தொண்டு செய்கிறார்கள். சமூக முன்னேற்றத்துக்குப் பங்களிப்புச் செய்கிறார்கள். அவர்களில் பலர் திறமைசாலிகளாக விளங்கி, ஏதோ ஒரு விதத்தில் சாதனை புரிகிறார்கள். ஆனால் அவர்களைப் பற்றிச் சமூகம் அவ்வளவு தெரிந்து கொள்வதில்லை. கொழுத்த சம்பளம் வாங்கி, அல்லது வருமானம் பெற்று வசதியாக வாழ்பவர்களாகவே சமூகம் அவர்களைப் பார்க்கிறது. அதனால் அவர்களின் திறமையும் சேவையும் அங்கீகரிக்கப்படுவதாக இல்லை.

இந்த நிலை மாறவேண்டும். உண்மையான திறமைசாலிகளும், சேவையாளர்களும் அவர்கள் எந்தத் துறையைச் சேர்ந்தவராக இருந்தாலும், அவர்களின் பணியையும், மதிநுட்பத்தையும் பாராட்டுவது சமூகத்தின் கடமை. விவசாயிகள், மீனவர்கள், தொழிலாளர்கள் ஆகிய ஆதாரமட்ட மக்களையும் இதற்குள் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

எங்கள் மண்ணின் அபிவிருத்தியிலும், எமது மக்களின் முன்னேற்றத்திலும் ஆர்வமும், அக்கறையும் கொண்டு உழைப்பவர்கள், சாதனை புரிபவர்கள் எந்தத் துறையைச் சார்ந்திருந்தாலும், எந்த மட்டத்தைச் சேர்ந்திருந்தாலும் சரி அவர்களைப் பாராட்டி விழா எடுத்து அவர்களுக்கு மட்டுமன்றி மற்றவர்களுக்கும் ஊக்கமளிப்பது மக்கள் கடமை ஆகும்.

இலக்கியம் கலை, அரசியல், தொழில் துறை, விஞ்ஞானம், தொழில் நுட்பம், பொருளியல், ஆராய்ச்சி ஆகிய துறைகளில் சிறந்து விளங்குவோர், சாதனை புரிவோர், சேவை செய்வோர் ஆகியவர்களைப் பற்றிய விவரங்கள், வாழ்க்கைப் பின்னணிகள் திரட்டப்பட்டு பேணப்பட வேண்டும். அந்தப் பணியை பல்கலைக்கழகம் செய்ய முன் வர வேண்டும். இந்த ஆவணப்படுத்தல் (Documentation) சேவையை புதிய தொழில் நுட்ப விஞ்ஞான உத்திகளைக்கையாண்டு செய்தல் வேண்டும்.

இதுவே பேராசிரியர் முன்வைத்த இரண்டாவது நல்ல கருத்தாகும்.

வெறும் அரசியல் வரலாறும், சம்பவங்களும் மட்டுந்தான் பதிவு செய்யப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டு பிற்சந்ததியினருக்கு தகவல் கிடைக்க வகை செய்யப்பட வேண்டும் என்பதல்ல. சமூக வரலாறு, தனி மனிதர் வரலாறு என்பனவும் பதியப்பட்டு, ஆவணப்படுத்தப்பட்டு பேணப்பட்டு அடுத்த சந்ததிக்கு வழங்கப்பட வேண்டியவையே. பல்கலைக்கழகம் போன்ற ஸ்தாபனம் அதனைச் செய்வது மிகமிகப் பொருத்தமாயிருக்கும்.

## தேர்தலை உடனே நடத்துக! அதிபர் ஸியாவுக்கு வேண்டுகோள்

பொதுத் தேர்தலை உடனடியாக நடத்தும்படி பாகிஸ்தான் செனட் உறுப்பினர்கள் பலர், அதிபர் ஸியா - உல் - ஹக்கை வற்புறுத்தினர்.

செனட் கூட்டம் நேற்று நடந்த போது இந்தக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டது.

நாடாளுமன்றத்தைக் கலைத்ததன் மூலம் ஜனநாயகத்துக்கு அதிபர் ஸியா அபகீர்த்தியை ஏற்படுத்தி விட்டார் என்று பாகிஸ்தான் செனட்டர்கள் குற்றஞ்சாட்டினர். (எ)

## கம்பியூட்டரில் கோளாறு; தேர்தல் முடிவு தாமதம்

மெக்ஸிகோ ஜனாதிபதித் தேர்தல் முடிவு வெளியாவது தாமதப்படுத்தப்பட்டுள்ளது.

கம்பியூட்டரில் கோளாறு ஏற்பட்டதே தாமதத்துக்குக் காரணம் என்று மெக்ஸிகோ அரசு அறிவித்தது.

தேர்தலில் மோசடி செய்யவே அரசு இத் தாமதத்தை ஏற்படுத்தியது என்று எதிர்க்கட்சிகள் கண்டித்தன. (எ)

## பிரிட்டிஷ் அரசு மீது இஸ்ரவேல் கண்டனம்!

ஜெருசலம், ஜூலை 11

இஸ்ரவேலிய அமைச்சரவை நேற்று அவசரமாகக் கூடி சவூதி அரேபியா பிரிட்டனிடம் இருந்து பெருந்தொகையில் ஆயுதங்கள் வாங்கச் செய்து கொண்ட உடன்பாடு பற்றி ஆராய்ந்தது.

அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவில், அரசுப் பேச்சாளர் ஒருவர் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

சவூதி அரேபியாவுக்கு ஆயுதங்கள் விற்பனை செய்ய பிரிட்டன் உடன்பட்டதை இஸ்ரவேல் அரசு வன்மையாகக் கண்டிக்கின்றது.

மத்திய கிழக்குப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண இந்த நடவடிக்கை உதவாது.

இப்படி அமைச்சரவை ஏகோபித்த கருத்து வெளியிட்டதாக அப் பேச்சாளர் தெரிவித்தார். (எ)

## ஸ்டாலின் எதிரிகளுக்கு அரசியல் புனர்வாழ்வு!

சர்வாதிகாரி ஸ்டாலினால் மரண தண்டனை விதிக்கப்பட்ட நிக்கொலஸ் புல்காரினுக்கு 'அரசியல் புனர் வாழ்வு' வழங்க சோவியத் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று அறிவிக்கப்படுகிறது.

புல்காரின், லெனினின் நெருங்கிய சகாவாக இருந்தார்.

ஸ்டாலின் ஆட்சிக்காலத்தில் சிறு விவசாயிகள் துன்புறுத்தப் பட்டனர். அதை எதிர்த்து புல்காரின் செயற்பட்டார்.

ஸ்டாலின் அரசு இவரைக் கைது செய்துசிறையில் அடைத்தது. பின்னர் இவர் மரணமானார்.

ஸ்டாலினால் பழிவாங்கப்பட்ட தலைவர்களின் 'அரசியல் வாழ்வுக்கு புனர்வாழ்வளிக்கும் திட்டம் ஒன்றை திரு. கோர்பச்சேவ் செயற்படுத்தி வருகின்றார். (எ)

## கூர்க்காலந்தில் போராட்டம் இடை நிறுத்தப்பட்டது!

புதுடில்லி, ஜூலை 11

கூர்க்காலந்து தேசிய விடுதலை முன்னணி தனது கிளர்ச்சியைப் பூரணமாக இடை நிறுத்தி வைத்துள்ளது.

இதுசம்பந்தமான அறிவித்தலை முன்னணித் தலைவர் சுபாஷ் கிஷிங் நேற்று விடுத்தார்.

மத்திய அரசு அறிவித்துள்ள மலைப்பிரதேசக் கவுன்ஸில் ஒன்றை டார்ஜிலிங் பிரதேசத்தில் நிறுவுவது என்ற யோசனை பற்றிய பேச்சுக்கள் முடியும் வரை, இந்த இடை நிறுத்தம் அமுலில் இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.

மேற்கு வங்காள முதலமைச்சர் ஜோதிபசு, திரு. கிஷிங்கின் அறிவிப்பை வரவேற்றுள்ளார்.

இதனிடையில், மத்திய ரிசர்வ் பொலிஸ் படையை டார்ஜிலிங் பிரதேசத்தில் இருந்து அகற்றி விட்டு எல்லைக் காவல் புறப்படையை அனுப்புமபடி மத்திய அரசை திரு. கிஷிங் கேட்டுக் கொண்டிருக்கின்றார். (எ)

## சோவியத் துருப்புக்கள் வாபஸ் தொடர்கிறது!

மாஸ்கோ, ஜூலை 11

ஜெனிவா உடன்பாட்டின் படி சோவியத் துருப்புக்கள் விலக்கப்படுவது நடந்து வருவதாக அறிவிக்கப்பட்டது.

கடந்த இரண்டுமாதங்களில் ஆப்கனிஸ்தானின் கிழக்கு, தென்கிழக்குப் பகுதிகளில் இருந்து முற்றாக சோவியத் துருப்புக்கள் விலக்கப்பட்டு விட்டன.

இத்தகவலை சோவியத் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

கெரில்லாக்களின் தாக்குதல்கள் நீடிக்கும் பட்சத்தில் சோவியத் துருப்புக்களை விலக்குவதற்கான கால அட்டவணை நீடிக்கப்படலாம். அல்லாவிடில் ஆகஸ்ட் மாதம் நடுப்பகுதியில் ஆப்கனில் நிலைகொண்ட சோவியத் துருப்புக்களில் அரைப்பங்கு வாபஸாகி விடும்.

இப்படி சோவியத் இராணுவத்தளபதி தெரிவித்தார். (எ)

வெளி உலகில்

## ஆயுதம் வாங்கும் வேட்டையில் அரபு நாடுகள் தீவிரம்!

லண்டன், ஜூலை 11

சோவியத்யூனியனிடம் ஆயுதங்களை வாங்குவதற்கு குவைத் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இரண்டு நாடுகளின் அரசுகளும் இது சம்பந்தமான பேச்சுக்களை நடத்தி வருவதாக அறிவிக்கப்பட்டது.

ஏவுகணைகளை வாங்குவதற்கு அமெரிக்காவை குவைத் அரசு முதலில் அணுகியது.

அமெரிக்கக் காங்கிரஸ் குவைத்தின் கோரிக்கையை நிராகரித்தது.

குவைத்துக்கு வழங்கப்படும் ஆயுதங்கள், இஸ்ரவேலுக்கு எதிரான அரபு நாடுகளின் கைகளுக்குச் செல்லக் கூடிய அபாயம் உண்டு என்று கூறியே காங்கிரஸ்கோரிக்கையை நிராகரித்தது.

ஏற்கனவே சவூதி அரேபியாவும் பத்தாயிரம் மில்லியன் பவுண் பெறுமதியான ஆயுதங்களை வாங்குவதற்கான ஒப்பந்தம் ஒன்றை பிரிட்டனுடன்செய்து கொண்டது.

அமெரிக்க காங்கிரஸ் சவூதி அரேபியாவின் கோரிக்கையை நிராகரித்ததைத் தொடர்ந்தே, அந்த நாடு இந்த நடவடிக்கையை எடுத்தது. (எ)

## கேரள ரயில் விபத்து: 200க்கும்அதிகமானோர் பலி என அறிவிப்பு

### அதிகமானோர்ராணுவத்தினர்

கேரள மாநிலத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கேரள ரயில் விபத்தில் பலியானோர் எண்ணிக்கை இருநூறுக்கும் அதிகம் என்று அறிவிக்கப்படுகிறது.

பாலம் ஒன்றைக் கடந்தபோது இந்த ரயில் விபத்துக்குள்ளானது என்றும், 14 பெட்டிகளுடன் வந்த ரயிலில் 9 பெட்டிகள் நீரினுள் அமிழ்கின, இரண்டு பெட்டிகள் தடம் புரண்டன என்பதும் தெரிந்ததே.

இதுவரை நூறுபேரின் சடலங்கள் மீட்கப்பட்டன. மீட்கப்பட்டோரில் சுமார் 500 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துக்குள்ளான ரயிலில் பயணம் செய்தவர்களில் அதிகமானோர் அரச அதிகாரிகளும், இராணுவ அதிகாரிகளும் என தெரியவந்துள்ளது. மீனவர்களும், சுழியோடிகளும் தொடர்ச்சியாக மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்விபத்தை ஒட்டி இந்திய அரசு இரு நாள் துக்கதினம் அறிவித்திருக்கிறது. (உ-5)

## அதிபர் றேகனுக்கு வேண்டுகோள்

வாஷிங்டன், ஜூலை 11

வளைகுடா சம்பந்தமான தனது கொள்கையை அமெரிக்க அரசு மாற்றிக்கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க காங்கிரஸின் முக்கிய செனட்டர்கள் அதிபர் றேகனுக்கு இந்த வேண்டுகோளை விடுத்தனர். (எ)

## செட்டிகுளம், கல்லாறு பகுதியில் கிடந்த சடலம் அடையாளம் காணப்பட்டது

கடந்த வெள்ளிக்கிழமை செட்டிகுளம் கல்லாறு பகுதியில் கண்டெடுக்கப்பட்ட உருக்குலைந்த சடலம் பாவற்குளம் 4 ஆம் யுனிட்டைச் சேர்ந்தசுப்பையா நடராசா (36 வயது 3 பிள்ளைகளின் தந்தை) என்ற குடும்பஸ்தருடையது என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

கடந்த30 ஆம்1 ஆம்திகதிகளில் பாவற்குளம் 4 ஆம் யுனிட்டில் நடத்தப்பட்ட தேடுதலின் போது இவரும் கைதாகி இருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றி மேலும் தெரிய வந்துள்ளதாவது:

கடந்த மாதம் 30 ஆம் திகதியும் இம்மாதம் முதலாம் திகதியும் பாவற்குளம் 4 ஆம், 5 ஆம், 6 ஆம் யுனிட் கிராமங்கள் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

தேடுதலின்போது பலர் தாக்கப்பட்டனர். கிணறு வெட்டும் வேலைக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. நமசிவாயம் தர்மராசா (28 வயது- ஒரு பிள்ளையின் தந்தை) ரெங்கசாமி மோகன் (31 வயது 3 பிள்ளைகள்) ஆகிய இருவரும் இச்சம்பவத்தில் மரணமானார்கள்.

4 ஆம் யுனிட் கண்ணகி அம்மன் கோவில் பூசகரான 61 வயதுடைய ஆ. கெங்காதரநாதன் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரான நடராசா நித்தியானந்தன் (31 வயது5 பிள்ளைகளின் தந்தை) ஆகியோருடன் சுப்பையா நடராசாவும் (36 வயது 3 பிள்ளைகளின் தந்தை) கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டனர் என்று கூறப்படுகிறது. இதில் நடராசாவின் சடலமே உருக்குலைந்த நிலையில் பிள்ளைகளால் கண்டு பிடிக்கப்பட்டது.

நித்தியானந்தனும், கெங்காதரனும் வைத்திய கவனிப்புக்கு உட்படுத்தப்படுவதற்காக வவுனியா இந்திய படைமுகாமுக்குக் கொண்டு சொல்லப்பட்டார்கள்.

இவர்களது இருப்பிடம் தெரியாமல் தவித்து திரிந்த உறவினர்கள் இவர்களைப் பார்ப்பதற்காக வெள்ளியன்று அனுமதிக்கப்பட்டார்கள்.

இருவரும் இந்தியப் படை முகாமில் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். [இ-164]

## 7 லட்சம் பேர் விண்ணப்பம்

கொழும்பு, ஜூலை 12

உணவு முத்திரை கேட்டு மேலும் ஏழு லட்சம்பேர் விண்ணப்பித்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இத்தகவலை சமூக சேவைகள் அமைச்சர் ஜே. எல். சிறிசேன கொழும்பில் நடந்த கருத்தரங்கொன்றில் வெளியிட்டார். (இ-எ)

## டிக்ஸிற் மட்டக்களப்பு சென்றார்

கொழும்பு ஜூலை 12

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் டிக்ஸிற் நேற்று முன்தினம் மட்டக்களப்பு சென்றார்.

மட்டக்களப்பு நூல் நிலையத்துக்கு புத்தகங்களை அன்பளிப்புச் செய்த பின்னர் அவர் அங்கு இந்திய அமைதிப்படை அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தினார் (இ எ)

## மட்டக்களப்பு கச்சேரியில் அத்தியாவசிய சேவைகள் மட்டும் இயங்குகின்றன

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது சிவில் நிர்வாகத் தடை அமுலில் உள்ளபோதிலும் பொது மக்கள் நலன் கருதி இம்முறை கச்சேரியில் அத்தியாவசிய பகுதிகள் மட்டும் இயங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

சமூக சேவை, பென்ஷன், பிறப்பு- இறப்பு, திட்டமிடல், உணவு என்பன மேற்படி பகுதிகளுள் அடங்கும். மாவட்ட அமைச்சு, காணி, ... த்தி பிரிவு, இறைவரி தேர்தல் உட்பட ஏனைய பகுதிகள்இயங்குவதற்கு நடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் இப்போராட்டம் காரணமாக தொழில் இலாகா, வன இலாகா, கூட்டுறவு இலாகா, கமநல சேவைகள் இலாகா, விவசாய இலாகா உட்பட ஏனைய பகுதிகள் வழமை போல் மூடப்பட்டுள்ளன.

வங்கி அலுவல்கள், ... தவிர ... களில் நடைபெறுகின்றன. (இ-21)

## எழுத்திலே காணப்படும் பண்பு பயில் நெறியிலிருந்து வருகின்றது

### நந்தியின் மணி விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை12

ஒருவன் தன்னுடைய பயில் நெறியில் நின்று கொண்டு அதிலே தேறியவனாக அதிலே நிறைவான அறிவு பெறுபவனாக வரும்பொழுது அப் பயில் நெறியின் தன்மைகளை தான் மேற்கொள்ளுகின்ற அந்த இலக்கியங்களுக்குக் கொண்டு வருகின்றான். நந்தி அவர்களது எழுத்திலே காணப்படுகின்ற அசாதாரண பண்புகள் அவரது பயில் நெறியில் இருந்து வருகின்றன.

பேராசிரியர் 'நந்தி' மணிவிழாவின் போது மணிவிழா மலரை வெளியிட்டு உரை நிகழ்த்திய பேராசிரியர் கா. சிவத்தம்பி மேற்கண்டவாறு கூறினார்.

பேராசிரியர் நந்தியின் மணி விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ் மாநகரசபை அலுவலக முன்றலில் நடைபெற்றது.

விழாவுக்கு தினகரன் பிரதம ஆசிரியர் திரு. இ. சிவகுருநாதன் தலைமை வகித்தார்.

மங்கள விளக்கேற்றப்பட்டு தமிழ் வாழ்த்துடன் விழா ஆரம்பமானது.

முதுபெரும் எழுத்தாளரான திரு. க. தி. சம்பந்தனும், திருமதி பத்மா சோமகாந்தனும், 'நந்தி' தம்பதியரை மாலை சூட்டி வரவேற்றனர். டாக்டர் எம். கே. முருகானந்தன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

திரு. தி. ச. வரதராசன் [வரதர்] பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

மாநகர ஆணையாளர் திரு. சி.வி.கே. சிவஞானம், திரு. சொக்கன், திரு. டொமினிக் ஜீவா, திரு. இ. முருகையன், திரு. க. தி. சம்பந்தன் ஆகியோர் பாராட்டுரைகள் வழங்கினர்.

பேராசிரியர் சிவத்தம்பி தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:-

இன்று வெளியிடப்படும் இம்மலர் கலை இலக்கியக்காரர்களால் ஒரு கலை இலக்கியக்காரனுக்கு அளிக்கும் பரிசிலாகவே அமைந்து விடுகின்றது. ஆங்கிலத்தில் ஒரு மரபு உண்டு. இப்படியான மலர்களை 'விழா எழுத்து' என்று சொல்வார்கள்.

நந்தியின் இந்தமலர் எழுத்தாளர்களின் மலராக இல்லாமல் நந்தியின் பல்வேறுபட்ட ஆளுமையையும் வெளிக்கொணர்வதாக அமைந்திருக்க வேண்டும்.

இப்படியான விழாக்களை எழுத்தாளர்கள் தான் - இலக்கியக்காரர் தான் செய்யவேண்டும் என்ற வழமை இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் எத்தனை டாக்டர்களுக்கு பொறியிலாளர்களுக்கு இப்படி விழா எடுத்திருக்கின்றோம்.

எத்தனையோ விற்பன்னர்களின் திறமைகள் எமது எதிர்கால சந்ததியினருக்குத் தெரியாமல் போகின்றன.

அதிஷ்டவசமாக நந்தி அவர்கள் எழுத்தாளராக இருப்பதால் அவரது சமூக வைத்தியத்துறை ஈடுபாடுகளை இரண்டு பக்கங்களிலாவதுபோட முடிகின்றது.

இந்த மாதிரியான குறைபாடுகள் எல்லாம் தமிழிலே, இலக்கியத்திலே வரலாறு எழுபவற்றிலே சம்பந்தப்பட்டவர்களுக்குச்சரி தொழிற்துறையில் உள்ளவர்களிலே இக்குறை நிச்சயமாக பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

அந்த முற்றுப்பெறுகின்ற பணியிலே பல்கலைக்கழகம் பங்கு வகிக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

இப்படி அவர் கூறினார்.

சமர்ப்பணவுரையை மலர்ப் பொறுப்பாசிரியர் திரு. நா. சோமகாந்தன் நிகழ்த்தினார். பேராசிரியர் அ. சண்முகதாஸ் நயவுரை நிகழ்த்தினார்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் சார்பில்திரு தெணியான் யாழ் இலக்கிய வட்டம் சார்பில் திரு. செம்பியன் செல்வன், கலை இலக்கியப் பத்திரிகை நண்பர்கள் சார்பில் திரு. எஸ். திருச்செல்வம், இலங்கை சம்பன் கழகம் சார்பில் திரு. இ. ஜெயராஜ், முத்தமிழ் வெளியீட்டுக் கழகம் சார்பில் திரு. மயிலங்கூடலூர் நடராசன், எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகம் சார்பில் திரு. நீர்வை பொன்னையன், கலை இலக்கியக் களம் சார்பில் திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

(இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ECALOM Tuition Centre
மனோகராச் சந்தி
ஒரு வருட வகுப்புக்கள் 89
பொருளியல் — உதயன்
கணக்கியல் — சௌந்தி
வர்த்தகம் — தேவா
அளவையியல் — குமார்
இந்து நாகரிகம் — அருள்நங்கை
தமிழ் — தாஸ், மீரா
18 - 07 - 1988
சேதன இரசாயனம்: திரு. செல்வா
20 - 07 - 1988

# உதயன்

12 - 07 - 1988 செவ்வாய்க்கிழமை

ECALOM Tuition Centre
மனோகராச் சந்தி
ஒரு வருட வகுப்புக்கள் - 89
பொருளியல் — உதயன்
கணக்கியல் — சௌந்தி
வர்த்தகம் — தேவா
அளவையியல் — குமார்
இந்து நாகரிகம் — அருள்நங்கை
தமிழ் — தாஸ், மீரா
18 - 07 - 1988
சேதன இரசாயனம்: திரு. செல்வா
20 - 07 - 1988

PERSONAL CLASSES
FOR
PHYSICS
ஆசிரியர்:
R. சத்தியசீலன்
இல. 21, மணல்தரை லேன்,
கந்தர்மடம் (யாழ்).
A/L 90 ஆரம்பம்: 15-07-88
(வெள்ளி: 4.15 p.m.)
A/L 89 நிலைமின்னியல்
ஆரம்பம்: 15-07-1988
(வெள்ளி: 3.00 p.m
(C 5759)

PULOLY EDUCATION CENTRE
PULOLY.
G.C.E. (A/L) 90
காலை 7.00 மணி
ஆரம்பம்: 14-07-1988
கலை, வர்த்தக பாடங்கள்
பொருளியல், கணக்கியல் } கணேசலிங்கம்
அளவையியல்: விக்கி
வர்த்தகம்: புஸ்பலிங்கம்
(5238)

## ஜனாதிபதிக்கு ஞாபக மறதி

### சிறிமாவின் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூலை. 12

ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு இன்று ஞாபக மறதி அதிகம். பல பிரச்சினைகளை அவர் அடிக்கடி மறந்து போகிறார்.

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இடைத் தேர்தல் பிரசாரக்கூட்டங்களில் பேசுகையில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் சொன்னதாவது:

1977 தேர்தலில் எம்மைத் தோற்கடிப்பதற்கு சிறையில் இருந்த ஜே. வி. பியினரைச் சந்தித்து ஆதரவு கேட்க ரெஜி டிமெல்லை அனுப்பியதை திரு. ஜெயவர்த்தன மறந்து விட்டாரா?

ஜே. வி. பி. இன்று தடை செய்யப்பட்ட அரசியல் கட்சி அல்ல. அதையும் திரு. ஜெயவர்த்தன மறந்து விட்டாரா?

இந்திய-இலங்கை ஒப்பந்தத்துக்குப் பின்னரே ஜே. வி. பியினர் ஆயுதங்களைத் தூக்கினர்.

ஜே. வி. பி. சொல்வதை எல்லாம் நாம் ஏற்கவில்லை. அவர்கள் எண்ணப்படி அவர்கள் நாட்டின் இறைமை, சுதந்திரத்தைப் பாதுகாக்கவே போராடுகின்றார்கள்.

இந்த அரசைத் தோற்கடிக்க ஜே. வி. பி. உட்பட அனைத்து சக்திகள் சுதந்திரக் கட்சி தலைமையில் ஒன்று திரள வேண்டும்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை மக்கள் ஏற்றுக் கொள்கின்றார்களா என்பதை அறியவே சுதந்திரக்கட்சி இடைத் தேர்தலில் போட்டியிடுகிறது.

சுதந்திரக்கட்சி பதவிக்கு வந்தவுடன் முதலமைச்சர் பதவிகள் எல்லாம் ரத்துச் செய்யப்பட்டுவிடும்.

மாகாண சபைகளைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கும் மாகாண சபைச்சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது; சுதந்திரக்கட்சி ஜனாதிபதி பதவிக்கு வந்தவுடன் அந்த அதிகாரத்தைத்தான் முதலில் பயன்படுத்துவார்.

ஆண்களிலும் பார்க்க பெண்கள்தான் விரைவில் முதுமையடைந்து விடுகிறார்கள் என்று ஜனாதிபதி சொல்கிறார். ஜனாதிபதித்தேர்தல் வந்தவுடன் யார் விரைவில் முதுமை அடைவார்கள் என்பதைப் பார்ப்போம்.

—இப்படி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சொன்னார்.

(உ-எ)

## நஷ்டஈடு...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சார்பில் நஷ்டஈடு, நிவாரணம் வழங்குமாறு இலங்கை அரசிடம் விடுக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருப்பதாகவும் உதவி அரச அதிபர் கூறினார்.

அதைத் தொடர்ந்தே பாதிக்கப்பட்ட தமிழ்ப் பகுதிகள்வாழ் மீனவருக்கு நிவாரணம், நஷ்டஈடு கிடைக்குமா என்ற ஒரு சந்தேகநிலை உருவாகியிருப்பது தெரிய வந்திருக்கிறது.

(அ-160)

## இடம்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ளன.

காடு வெட்டுவதற்கு முதற்கட்டமாக ஆயிரம் ரூபாவும், குடியேறுவதற்கு மூவாயிரம் ரூபாவும் வீடுகட்டுவதற்கு 15 ஆயிரம் ரூபாவும் இவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

மூன்று வருடத்திட்டத்தின் அடிப்படையில் இந்த மாதிரிக் கிராமம் அமைக்கப்படவுள்ளது.

(க-10)

வடமராட்சிப் பிரமுகர்கள்

## யுத்த நிறுத்தத்துக்கு தளபதியிடம் வலியுறுத்து

வடமராட்சி, ஜூலை 12

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வந்து — சமாதானம் ஏற்படவேண்டுமானால்— முதலில் யுத்த நிறுத்தம் ஒன்றைப் பிரகடனப் படுத்துங்கள்.

வடமராட்சிப் பகுதிப் பிரமுகர்கள் இந்திய அமைதிப் படையின் வடபகுதித் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் சர்தேஷ்பாண்டேயிடம் இவ்வாறு ஆலோசனை கூறினார்கள்.

நேற்று வடமராட்சிக்கு விஜயம் செய்த மேஜர் ஜெனரல் சர்தேஷ்பாண்டே புலோலி அமைதிப்படை முகாமில் வைத்து நேற்றுக் காலை பிரசைகள் குழு, மீனவர் சங்கம், தமிழீழ மக்கள் மன்றம் போன்றவற்றின் பிரதிநிதிகளையும், உதவி அரசாங்க அதிபர்களையும் சந்தித்துப் பேசினார்.

இச்சந்திப்பின் போது "தற்போது இழுபட்டு வரும் ஈழத்தமிழர் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக ஆயுதங்களைப் போட்டு விட்டு, பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்க்குமாறு விடுதலைப் புலிகளை வற்புறுத்த வேண்டும்" எனக் கூட்டத்தவரைப் பார்த்து சர்தேஷ்பாண்டே கோரினார்.

"இந்திய அமைதிப் படையினரான நாம் புலிகளை அழிப்பதற்காக இங்கு வரவில்லை. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவே வந்துள்ளோம்" என்றும் மேஜர் ஜெனரல் சர்தேஷ்பாண்டே கூறினார்.

அதற்குப் பதிலளித்த கூட்டத்தினர் "முதலில் யுத்த நிறுத்தத்தைக் கொண்டு வாருங்கள். அதற்குப் பின்னர் வேண்டுமானால் விடுதலைப்புலிகள்பேச்சுவார்த்தைக்குச் சம்மதிக்கலாம்" என்று பதிலளித்தனர்.

(உ-160)

## பாதிக்கப்பட்டோருக்கு....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

அவர் இதுபற்றி மேலும் தகவல் தருகையில் தெரிவித்ததாவது:-

அக்டோபர் 10 ஆம் திகதிக்குப் பின்னர் வடக்கு—கிழக்குப் பகுதிகளில் ஏற்பட்ட பாதிப்புகள் அதிகம்.

எனவே இந்தப்பாதிப்புகளுக்கு ஆயிரக்கணக்கானவர்களிடமிருந்து நிவாரண, புனர்வாழ்வு, புனர்நிர்மாண உதவிகள் கோரும் விண்ணப்பங்கள் புனர் வாழ்வு அமைச்சுக்கு வந்து சேர்ந்த வண்ணம் உள்ளன.

ஆனால்இந்த விண்ணப்பங்கள் எதுவும் திட்டமிட்ட ஒருமாதிரிஅமைப்பில் தயாரிக்கப்படவில்லை,

இதன் காரணமாக ஆயிரக்கணக்கிலான மேற்படி விண்ணப்பங்களை சம்பியூட்டர் கருவி மூலம் பரிசீலனை செய்ய முடியாதுள்ளது.

### விண்ணப்பப் படிவங்கள்

இதன் காரணமாக விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்ய ஏற்றவிதத்தில் ஒரே மாதிரியான அமைப்பில் சம்பியூட்டர் கணிப்பீட்டிற்கு ஏற்ற விதத்திலான விண்ணப்பப்படிவங்களை புனர்வாழ்வு அமைச்சே தயாரித்து விநியோகிக்க உள்ளது.

இதன் அடிப்படையில் இந்த விண்ணப்பத்தை நிரப்புவதற்கு வழி காட்டும் வகையிலும் புனர்வாழ்வு அமைச்சின் கொள்கை, நிகழ்ச்சித் திட்டங்கள் என்பனவற்றை விளக்கும் வகையிலும் கைநூல் ஒன்றும் வெளியிடப்படஉள்ளது.

(க-9)

## மன்னாரில்....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

விடுதலை செய்வதுடன், பாடசாலை மாணவர்களை இனிமேல் கைது செய்யக் கூடாது —

★ ஆயுதங்களை ஒப்படைத்து புலிகள் பேச்சுவார்த்தைக்கு உடன்பட வேண்டும் —

மேற்கண்ட கோரிக்கைகளை முன்வைத்து மன்னாரில்இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் அமைதிப் பேரணி ஒன்றை நடத்தினார்கள்.

மன்னார் நகரில் அமைந்துள்ள இந்தியப் படை அலுவலகத்தில் மகஜர் ஒன்றைக் கையளிக்கச் சென்றபோது மகஜர் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

மாணவர்கள் பேரணியில் கொண்டு சென்ற சுலோக அட்டைகளும் வெள்ளைப்புறா, பூமாலை என்பனவும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டன.

பேரணியில் பங்குபற்றிய உயர்தர வகுப்பு மாணவர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டு இராணுவ வாகனங்களில் கயிற்றால் பிணைக்கப்பட்டு நகர வீதிகளில் கொண்டு செல்லப்பட்டார்கள்.

பேரணி தடுக்கப்பட்டதைத் தொடர்ந்து நடைபெற்ற தேடுதலில் 5 மாணவர்களும் அதிபர், ஆசிரியர்கள் என்று மொத்தம் மூவரும் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

கைது செய்யப்பட்ட மாணவர்களில் பலர் இம்மாத உயர்தரப் பரீட்சையில் தோற்ற வேண்டியவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(க-164)

## சு. க. மீது....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றக்கூடியதான தேவையற்ற பயமுறுத்தல்களை ஜனாதிபதி விடக்கூடாது அரசு பதற்றப்படக் கூடாது.

ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் அரசுக்கு உண்மையான அக்கறை இருக்குமானால் தோல்வி காண நேரிடினும் ஒழுங்கான தேர்தல் ஒன்றை நடத்த முன்வரவேண்டும்.

இரகசியப் பொலீஸார் எனது பேச்சை ஒலிப்பதிவு செய்து ஜனாதிபதிக்குப் போட்டுக்காட்ட வேண்டும்.

இப்படி திரு. அனுரா பண்டாரநாயக்கா சொன்னார். (அ-எ)

## ஹர்த்தாலுக்கு...

பட்டிருப்பதாவது:-

மன்னார் குஞ்சுக்குளத்திலிருக்கும் எமது முகாமை இந்தியப் பட்டாளம் சுற்றிவளைத்த போது அங்கு புனர் வாழ்வு வேலைகளில் ஈடுபட்டிருந்த எமது தோழமை இயக்கமான ரெலா (தமிழ்ஈழவிடுதலை இராணுவம்) தலைவர் காந்தன் வீரமரணம் அடைந்தார்.

இந்திய இராணுவத்தின் இந்தச்செயலைக்கண்டித்து எதிர்வரும் 13ஆம் 14ஆம் திகதிகளில்பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்க "புளொட்". (தமிழ் ஈழ மக்கள் விடுதலைக்கழகம்) ரெலா (தமிழ்ஈழவிடுதலை இராணுவம்) கூட்டாக ஏற்பாடு செய்துள்ளது.

அன்றைய தினம், அரசாங்க அதிபர் காரியாலயம் அரச, தனியார் போக்குவரத்துக்கள் (உள்ளூர்வெளியூர்), வங்கிகள், பாடசாலைகள், தனியார் வர்த்தக நிலையங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகிய சகல ஸ்தாபனங்களும் ஹர்த்தாலை பூரணமாகஅனுஷ்டிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்- இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-க)

## காணவில்லை



### வி. ஆர். பாலகோபால்

வி. ஆர். பாலகோபால் என்ற 18 வயது இளைஞரை 1988 ஜனவரி [தை] முதல் காணவில்லை. இவர் சித்தசுவாதீனமற்ற நிலையில் இருந்தவர், மனவளர்ச்சி குன்றியதால் குழந்தைப்பிள்ளை போலப் பேசுவார். மேல் வாய்ப் பற்கள் சில இவருக்கு இல்லை. ஒரு காலின் பின் தொடையில் தழும்பு ஒன்று உண்டு. தன்னுடைய பெயரைக் கூறுவார். சாரமும் சேட்டும் அணிந்திருப்பார். இவர் தற்போது தங்கியுள்ள கொக்குவில் விலாசம் கூறமுடியாதவர்

இவரைப்பற்றி விவரம் அறிந்தோர் கீழ்க் காணும் முகவரிக்கு தொடர்பு கொண்டால் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

சி. இராசரத்தினம்
C. T. B டிரைவர்,
வராகி அம்மன் கோவிலடி
"என். கே" அரிசி மில் அருகில்
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(5040)

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

கூறுவிலை

### குழாய் வீதி மின் விளக்குகளுக்கு பிராக்கட்

மேல் குறிக்கப்பட்டுள்ள குழாய் வீதி மின் விளக்குகளுக்குத் தேவைப்படும் பிராக்கட்ஸ் செய்து கொடுப்பதற்கான கூறு விலைகள் என்னால் எதிர்வரும் 22 - 7 - 88ம் திகதி பிற்பகல் 2-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இப்பிராக்கட்டுக்களுக்கான மாதிரி அளவுகள் யாழ் மாநகரசபை களஞ்சியப்பகுதியில் காரியாலய நேரங்களில் பார்வையிடலாம்.

கூறு விலைகள் யாவும் அரக்கு முத்திரையிடப்பட்டு மேல்குறிப்பிட்ட திகதிக்கு கிடைக்கத்தக்கதாக அனுப்புதல் வேண்டும்.

சி. வி. கே. சிவஞானம்
மாநகர சபை ஆணையாளர்

C5758

விக்னு டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி றோட், யாழ்நகர்.
(கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த நிறுவனம்)
A/L கலை, வர்த்தகம்
90 ஆரம்பம்: 16-07-1988
காலை 8.00 மணி
எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:
பொருளியல் : திரு. கிருஷ்ணானந்தன்
கணக்கியல் : திரு. வன்னியசிங்கம்
வர்த்தகவியல் : திரு. லங்கா
அளவையியல் : திரு. சுப்பிரமணியம்
தமிழ் : திரு. குழந்தை
இந்து நாகரிகம்: திரு. காரை சுந்தரம்பிள்ளை
அரசியல் : திரு. மஃறூவ்
புவியியல் : திரு. குணராஜா
(C/5757)

## மரண அறிவித்தல்கள்

### பகவான் பூபாலசிங்கம்

செல்வன் பகவான் பூபாலசிங்கம் (பொறியியற் பீட இறுதியாண்டு மாணவன், Moscow University) ரஸ்சியாவில் காலமானார். இவர் பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் காலஞ்சென்ற திரு. R R. பூபாலசிங்கம், பாக்கியம் ஆகியோரின் செல்வ மகனும், ஸ்ரீதரசிங், இராஜன் கார்ல்மாக்ஸ், (Norway), விமலாதேவி, கல்யாணி (U. K) மல்லிகை, முல்லை, ஆகியோரின் அன்புச் சகோதரனும், சேகரன், (பரந்தன் கெமிக்கல்ஸ்), பிரபானந்தா (U. K) நாகேஸ்வரி ஆகியோரின் அருமை மைத்துனருமாவார்.

ஈமைக்கிரியைகள் புதன்கிழமை 13- 7- 88 நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
ஸ்ரீதரசிங் பூபாலசிங்கம்
இலக்கம் 3, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

### கஸ்பார் அன்ரன்

பிரபல தொழிலதிபர் கஸ்பார் அன்ரன் 7-7-88இல் தென்இந்தியாவில் காலமானார்.

இவர் குருநகரைச் சேர்ந்த கஸ்பார் அந்தோனியா தம்பதிகளின் அன்பு மகனும், பிலோமினாவின் அருமைக் கணவரும், ரகு (பிரான்ஸ்), றஜி, றஜினி, ஜான்சி, விஜினி, ரதி, கொடி ஆகியோரின் அன்புத் தந்தையும், கிறிஸ்தியான் அருளம்மா - மனவல் செலக்ஸ்ரீனா தம்பதிகளது மருமகனும், காலஞ்சென்ற பிரான்சிஸ், சின்னராசா, சேவியர், டேவிட் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும், செல்வராணி (பிரான்ஸ்) கிறிஸ்துராசா, துரைசிங்கம், பாக்கியம், சரோஜா, கிட்லர், பஞ்சவர்ணம், அழகு, ராசாத்தி, கிளி, ஜேங்காஸ், லில்லி ஆகியோரின் மைத்துனரும், துரைராசசிங்கம், செல்வராசா, தங்கராசா ஆகியோரின் சிறியதகப்பனாரும், சாந்தினி, வினி, நிலானி, ராஜன், டயானி, றீகன் ஆகியோரின் பெரியதந்தையும், கலா, சித்திரா, மகாராணி ஆகியோரின் மாமனாரும், மரீனா, மயூரா, தர்ஷனா, மல்கியா, மகிபன், சுபாஷினி, சுலெக்ஷன், ரதி ஆகியோரது பேரனும் ஆவார்.

பூதவுடல் இங்கு எடுத்துவரப்பட்டு இறுதிக் கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: துரைராசசிங்கம்கலா
23/4, பாக்ரோட்,
றெக்கிளமேஷன்,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

(C 5761)

### நாகலிங்கம் கந்தசாமி

யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த இளைப்பாறிய அரசாங்க பிரதம லிகிதர் நாகலிங்கம் கந்தசாமி காலமானார். இவர் காலஞ்சென்ற நாகலிங்கம் தம்பதிகளின் அன்புப் புதல்வனும், ஞானம்பிகையின் அன்புக் கணவரும், கமலேஸ்வரி (U. K) பாலச்சந்திரன் (சவூதி) யோகச்சந்திரன் (சவூதி) சந்திரவதனா ஆகியோரின் அன்புத் தந்தையும், இ. முருகவேள் (U. K) பொ. கணேசலிங்கம் (கூட்டுறவுப் பரிசோதகர் பரந்தன்), நவமலர், குமுதினி ஆகியோரின் அன்பு மாமனாரும், அருளினி, சாளினி, நிசாந்தன், முகுந்தன், சுதர்சன் பிரசன்னா, ரேசன்னா, தர்சினி, பிரசாத், சுகன்யா ஆகியோரின் அன்புப் பாட்டனுருமாவார்.

அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைக்காக அன்னாரது இல்லத்திலிருந்து (இல. 11, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி யாழ்ப்பாணம்.) இன்று (12- 7- 88) மாலை 3மணிக்கு வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
பொ. கணேசலிங்கம்

(5043)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 12 - 07 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road. Jaffna on Tuesday 12 th July 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org